# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**********

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**

**முறையீட்டு மனு எண். 28/பே/2019**
**ஆணை நாள் 30–09–2019**

**திரு. K. R. நடராஜன்,**
**212, 6–வது கிராஸ்,**
**ஹெரிடேஜ் ஜெயேந்திரா நகர்,**
**செம்பாக்கம்,**
**சென்னை – 600 073.** — முறையீட்டு மனுதாரர்.

**திரு.எம்.வெங்கடேஷ்,**
**முன்னாள் செயல் அலுவலர்**
**செம்பாக்கம் பேரூராட்சி.** — எதிர் மனுதாரர்.

**ஆணை.**

காஞ்சிபுரம் மாவட்டம், செம்பாக்கம் பகுதி, ஹெரிடேஜ் ஜெயேந்திரா நகர், 6–வது கிராஸ், எண். 212, என்ற முகவரியில் வசிக்கும் திரு.கே.ஆர்.நடராஜன் என்பவரது 12.02.2019 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 13.02.2019 அன்று பெறப்பட்டு, முறையீட்டு மனு எண். 28/2019 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு மீதான அறிக்கைகள் பெறப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில், காஞ்சிபுரம் மாவட்டம், செம்பாக்கம் பேரூராட்சியின் முன்னாள் செயல் அலுவலர் திரு. எம்.வெங்கடேஷ் என்பவர், காஞ்சிபுரம் மாவட்டம், செம்பாக்கம் பேரூராட்சிக்குட்பட்ட சர்வே எண்.149 மற்றும் 150ல் 19.54 ஏக்கர் பரப்பளவில் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் பூங்காவிற்காக ஒதுக்கப்பட்ட பொது திறவிடப் பகுதியான 5,624 சதுர அடி பரப்புள்ள நிலத்தில், ஹெரிடேஜ் ப்ராப்பர்டி டெவலப்மெண்ட் லிமிடெட் நிறுவன தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநருமான திரு.வி.கிருஷ்ணபிரசாத் என்பவர் பேரூராட்சிக்கு சொந்தமான இடத்தில் முறைகேடாக கட்டியுள்ள கட்டிடங்களை அகற்றி, பேரூராட்சி மூலம் வசூலிக்கப்படும் மாத வாடகையினை உடனடியாக நிறுத்த அறிவுறுத்தி வழங்கிய **03.11.2008** நாளிட்ட காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியரின் ஆணையினை அப்போதைய பேரூராட்சி செயல் அலுவலர் திரு.எம்.வெங்கடேஷ் என்பவர் உடனடியாக செயல்படுத்தாமல் நான்கு மாத காலம் கடந்து **28.04.2009** அன்று மேற்படி திறந்தவெளி இடம் குத்தகைக்கு விடப்பட்டதை ரத்து செய்து ஆணையிட்ட நிலையில், மேற்படி ஆக்கிரமிப்பு இடத்தினை உடனடியாக காலி செய்யாமல் **செப்டம்பர் 2009ல்** தான் மேற்கண்ட நிறுவனத்தாரால் காலி செய்யப்பட்டதாகவும், இந்நேர்வில் அப்போதைய பேரூராட்சி செயல் அலுவலர் திரு.எம்.வெங்கடேஷ் என்பவர் அரசு நகராட்சி நிர்வாகத்துறை, பேரூராட்சிகளின் இயக்குநரால் வழங்கப்பட்ட சுற்றறிக்கைகள்,

சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும ஆணைகள் மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியத் தலைவரது ஆணைகளை பின்பற்றி செயல்படவில்லை எனத் தெரிவித்து மேற்படி செயல் அலுவலர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி தனது முறையீட்டு மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

மேற்படி முறையீட்டு மனு தொடர்பாக முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர் மனுதாரரான செம்பாக்கம் பேரூராட்சி செயல் அலுவரும் தற்போதைய காஞ்சிபுரம் மாவட்டம், சிட்லபாக்கம் பேரூராட்சி செயல் அலுவலருமான திரு.எம். வெங்கடேஷ் ஆகியோர்களிடம் 23.04.2019 அன்று வாக்கு மூலம் பெறப்பட்டது.

மேற்படி முறையீட்டு மனு தொடர்பாக முன்னாள் செம்பாக்கம் பேரூராட்சி செயல் அலுவலரும் தற்போதைய காஞ்சிபுரம் மாவட்டம், சிட்லபாக்கம் பேரூராட்சி செயல் அலுவலருமான திரு.எம்.வெங்கடேஷ் என்பவரது 12.06.2019 நாளிட்ட விளக்க அறிக்கை பெறப்பட்டது.

முறையீட்டு மனுதாரின் முறையீட்டு மனு தொடர்பாக பெறப்பட்ட முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர் மனுதாரர் ஆகியோர்களின் வாக்குமூலங்கள் மற்றும் செம்பாக்கம் முன்னாள் பேரூராட்சி செயல் அலுவலரும் தற்போதைய காஞ்சிபுரம் மாவட்டம், சிட்லபாக்கம் பேரூராட்சி செயல் அலுவலருமான திரு.எம்.வெங்கடேஷ் அவர்களின் விளக்க அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

இந்நேர்வில், முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ள முறைகேடுகள்யாவும் 2008 மற்றும் 2009 –ஆம் ஆண்டுகளில் நடைபெற்றுள்ளன. மேற்படி நிகழ்வுகள் நடைபெற்று ஐந்து ஆண்டுகள் கடந்த நிலையில் இப்பொருள் தொடர்பான முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் விசாரணைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10 (3) (C) ன்படி ஐந்து ஆண்டுகளுக்கு முற்பட்ட நிகழ்வுகள் எதனையும் இம்முறைமன்ற நடுவத்தால் விசாரித்திடலாகாது என்ற நிலையில் இப்பொருள் மீதான தொடர் நடவடிக்கையினை கைவிடுவதென முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

செயலாளர்.

பெறுநர்

1.திரு. K. R. நடராஜன்,
212, 6th Cross
ஹெரிடேஜ் ஜெயேந்திரா நகர்,
செம்பாக்கம்,
சென்னை – 600 073.

2.திரு.எம்.வெங்கடேஷ்,
முன்னாள் செயல் அலுவலர்,
சிட்லபாக்கம்பேரூராட்சி,
காஞ்சிபுரம் மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
காஞ்சீபுரம் மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
காஞ்சிபுரம்.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனி எழுத்தர்.
முறைமன்ற நடுவ செயலரின் தனி எழுத்தர்.
உதவிப் பிரிவு அலுவலர் (ஊராட்சிகள்) தகவலுக்காக.